உ
சிவமயம்

# திருப்பள்ளியெழுச்சியும் புகழ்மாலையும்



பொற்பதி வீதி, கோண்டாவில்
திருவருள்மிகு
ஸ்ரீ சிவமஹாகாளி அம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிவமகாகாளீஸ்வரியின் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள்

போற்றி எம் முழு முதற் பொருளே
பொன்முகம் அலர்ந்திட திருவிழி மலர்ந்திடுவாய்
ஏற்றிடும் பக்தருக்கு அருள் செய்ய நீயும்
பற்பல வடிவங்கள் தோற்றி எழுந்தாயே
காற்சிலம் பொலி எழும்புது காற்றினிலே
காசீஸ்வரர் துணையுடன் திருவருள் சொரிய
பொற்பதி பதியுறை காளீஸ்வரியே
சிங்கார முகம்காண எழுந்தருளாயே

திக்கெட்டும் இருளெல்லாம் அகன்றது - உன்
அருள் பட்டதும் ஞாயிறு எழுந்தது
உன் அருள் பெற்றிட்ட அடியார்கள் வாழ்வில்
துன்பங்கள் தொலைந்தன சிவகாளீஸ்வரியே
வற்றிடாத உன் கருணையன்பு பற்றுதே அம்மா
செப்பிட செப்பிட தெவிட்டாத கனியே
அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே
பூரண ஜோதியே பள்ளி எழுந்தருளாயே

விண்ணகத் தேவர்கள் பூமழை பொழிய
தென்னாடுடையவனும் உன்னுடன் நின்றார்
எண்ணற்ற அடியவர்கள் உன்னடி தொழவே
கண்ணகத்தே வைத்து போற்றி செய்தேத்த
பண்ணினோர் மொழியாள் பதம் காண வந்தார்
பெண்ணினல்லாள் அவள் பூமுகம் கண்டார்
பெரும் திரள் மக்கள் புடை சூழ்ந்து நின்றார்
அகிலத்தில் ஒளி வீச பள்ளி எழுந்தருளாயே

பண்ணிசை பாடிடும் பக்தர்களொருபால்
வேதங்கள் ஓதிடும் வேதியர்களொருபால்
இன்னிசை விருதுகள் இயம்பிட எங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தக் கண்ணீர் அருவியென ஓடும்
மணி ஒளி நாதம் பரவிட எங்கும்
அணி திரள் யோதியை தொழுது நின்றாரே
சென்னியில் கைகள் கூப்பிட பக்தர்
சிவமகாகாளீஸ்வரியே பள்ளி எழுந்தருளாயே

மாருதப்புரவீக வல்லி உனை வலம் வந்து
பேறுகள் பெற்றாள் உன் கருணையாலே
காரிருள் வேளையில் நீ எங்கும் சென்று
காற் சிலம் பொலியால் அறிய வைத்தாயே
பேரிருள் சூழ்ந்த பித்தர்கள் வாழ்வில்
விண்ணொளி காட்டி காட்சி கொடுத்தவளே
முப் பொருளே மூவா முதலே முக்கண்ணன் முதல்வியே
அலங்கார நாயகியே பள்ளி எழுந்தருளாயே

பேரிகை மத்தளம் முழவுகள் அதிர
திருவீதி வலம் வந்து பேரருள் தந்தாய்
சுவைத்திட என்றும் தெவிட்டாத கனியே
நினைத்திடும் தோறும் அணைத்திடும் தாயே
சிரிப்பொலி கேட்டு எம் காது குளிர
சிந்தை மயங்குது உன் எழில் காண
காரிருள் நீங்கி பக்தர்கள் வாழ்வில்
மாபெரும் ஜோதியாய் பள்ளி எழுந்தருளாயே

சிங்காரப் பட்டுடுத்தி சித்திரத்தேரேறி வந்து
எங்கும் புகழ்மணக்க கடைக்கண் பார்வை தந்து
சங்கினொடு மத்தளமும் இசைத்துவர நீயும்
தங்கமுகம் தானெடுத்து சிரித்து வருவாயே
எங்கெங்கோ நாம் பிரிந்து சென்றும் - எம்
அங்கத்தில் காற்றாக நுழைந்து சென்றாயே
மங்காத புகழழகி சிவமகாகாளீஸ்வரி தாயே
சிங்கார முகம் காண எழுந்தருளாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியொடு கொன்றை வானளாவு வேம்பு
தென்னையொடு மாவும் பூகமும் மேவும்
கோண்டாவில் பதியுறை சிவமகாகாளியே
பொற்பதியுறை புகழ்பூத்த தாயே
சூலம் தனையெடுத்து வேப்பிலை பிடித்தாயே
கண்மாரி கருமாரி உருமாறி நீயே
கழுமரம் ஏறிய காத்தவராஜனை காத்தவள் நீயே
பழுதிலா பதுமநிதியே பள்ளி எழுந்தருளாயே

சீர்வளர் கல்வியும் செல்வமும் செழிக்க
சிவமகாகாளியின் திருநீற்றொளி சிறக்க
பாவலர் காவலர் பரவியே துதிக்க
வார்கடல் உலகில் வருந்தியே ஏத்த
போர்ப்பகை அகற்றி பொலிவு தந்தாயே - அம்மா
கோண்டாவில் பதிசிறக்க அருள் சொரிந்தாயே
சகல சௌபாக்கியமும் தந்து எமக்கு
அருள் செய்யத் தாயே பள்ளி எழுந்தருளாயே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் தருவாயே அம்மா...

ஏழை எனக் அருள்தரவே எழுந்திடனும் அம்மா
வாழ வழிகாட்டிடவே வரவேண்டும் அம்மா
பொற்பதியில் மலர்ந்தவளே ஆதிசக்தி அம்மா
நீயிறங்கி வரவேண்டும் பாடுகிறேன் அம்மா
(ஏழைஎனக்)

பாரெங்கும் புகழோசை எழவேண்டும் அம்மா
சீரோங்கும் பதியினிலே சிரித்திரிக்கும் அம்மா
தீராத தாகம் கொண்டு அருளமுதம் பருகிடவே
நாள் தோறும் எனை நாடி வரவேண்டும் நாயகியே
(ஏழைஎனக்)

ஊரெல்லாம் செழிக்க வேண்டும் உத்தமியே அம்மா
நோய்பிணிகள் அகலவேண்டும் சிவமகாகாளி யம்மா
தாய்க்கு தாயான தயாபரியே அம்மா
சேயாக எனை ஏற்று இரங்கிடுவாய் அம்மா
தாயெனவே ஓடி வந்து சரணடைந்தேன் நானே
கோண்டாவில் பதியுறையும் எங்கள் சக்தி தாயே
(ஏழைஎனக்)

சிங்கார நாயகியே சிவமகாகாளியம்மா
மங்காத புகழளிக்கும் வீரபத்திர காளியம்மா
எங்கெங்கு சென்றாலும் எமைத்தொடரும் சக்தியம்மா
உள்ளங்களை கொள்ளை கொண்ட வீரமகாகாளியம்மா
கனை கடலின் தாமரையாய் உருவெடுத்தாய் அம்மா
காலனையே கலங்கவைக்கும் காற்சதங்கை அம்மா
(ஏழை எனக்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்தரும் நாயகியே...

பலநூறு ஆண்டின் முன் பொற்பதியில் மலர்ந்தாய்
கள்ளிச் செடி பற்றையிலே துள்ளிநீ திரிந்தாய்
அம்மா நீ உருவெடுத்து சூலத்தில் அமர்ந்தாய்
காசீஸ்வரர் உடன்நின்று சிவ மகாகாளியானாய்

பக்தர்கள் புடைசூழ தேரேறி நீயமர்ந்து
திருவீதி வருகின்றாய் திருக்காட்சி தருகின்றாய்
பெண்ணடியார் தொண்டு செய்ய பேருவகை நீயும் கொண்டு
கண்ணாயிரம் காட்டிநின்று கருணைமழை பொழிகின்றாய்
(பக்தர்கள்)

திருமஞ்சக் கிணற்றினிலே திருமகளே நீராடி
மாசி மகப்பெருமை சொல்ல காளிநீயும் வருகின்றாய்
ஆசிமட விநாயகரும் கந்தவேளும் துணையிருக்க
ஆசி பல நீ கூறி தீர்த்தமாடி வருகின்றாய்
(பக்தர்கள்)

செம்பட்டு சேலையிலே சிங்காரி நீ சிரித்து
அலங்கார நாயகியாய் அகமகிழ்ந்து வருகின்றாய்
மங்காத புகழளிக்கும் சிவமகாகாளியம்மா
எங்கெங்கும் நீ சென்று திருவருளை காட்டுமம்மா
(பக்தர்கள்)

பாரெல்லாம் அடியவர்கள் பதம்காண துடிக்கின்றார்
புலம்பெயர் தமிழர்களாய் மனமுடைந்து தவிக்கின்றார்
நலமெல்லாம் வேண்டிடவே நாள் தோறும் பணிகின்றார்
பலநூறு பணிசெய்ய உனக்காக விழிக்கின்றார்
(பக்தர்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்கதி தரும் நாயகியே...

கோண்டாவில் பதிஉறையும் குலதெய்வம் நீயே
வேண்டி நிற்கும் அடியவரை அரவணைக்கும் தாயே
தாயெனவே நாடிவந்தோம் அருள் தருவாய் நீயே

உடுக்கையொலி கேட்டிடவே உளம் குழைந்து ஓடிவந்தாய்
உன்பதத்தை தொழுவவற்கு கருணைமழை நீ சொரிந்தாய்
வேதனைகள் தீர்த்துவைத்தாய் வித்தகியே அம்மா
சோதனையில் தூக்கி விட்டாய் சுந்தரியே அம்மா
உடுக்கை யொலி கேட்கிறதே.....

காற்சலங்கை ஜலஜலக்க காரிருளில் வருகின்றாய்
சிரிப்பொலிகள் கேட்கிறதே சிவனோடு எழுகின்றாய்
பாரிலெம்மைத் தேடி வந்தாய் பார்வதியே அம்மா
தேவியுன்னைச் சரணடைந்தேன் கண்துடைப்பாய் அம்மா
உடுக்கை யொலி கேட்கிறதே.....

மாருதப்புர வல்லியுனை வலம் வந்து வணங்கி நின்றாள்
பார்போற்றும் உன்னருளை பருகியவள் சென்றாள்
பொற்பதியில் கோயில் கொண்ட சிவமகாகாளியம்மா
நற்கதியை நீ தருவாய் நம்பி வந்தோம் நாமம்மா
உடுக்கையொலி கேட்கிறதே......

## வெற்றிதரும் வித்தகியே...

தத்தகிட தத்தகிட தாளமிடும் காளி
சித்தமது மீதமர்ந்து வினைதீர்க்கும் சூலி
பக்தர்களை காப்பாற்ற பலி தீர்த்த மாளி
பித்தநிலை தனை தீர்க்கும் சிவமகாகாளி

தகதகிட தகதகிட பேரிகைகள் முழங்க
தணலுருவாய் நீ எழுந்து வாள் கொண்டு வாறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரர்களை அழித்திடவே சுழன்றோடி நீயும்
பார்மீது எழுந்திடுவாய் பராசக்தி நீயே
அழுத கண்ணீர் ஓயவில்லை கண்திறந்து பாராய்
அணைத்திடவும் யாருமில்லை உனையன்றித் தாயே
நினைத்திடவே வந்திடுவாய் நீ தானே தாயே
வினைதனையே போக்கிடுவாய் பொற்பதியின் தாயே
வேதாந்த மந்திரங்கள் வேதியர்கள் ஓத
தேவர் புடைசூழ நீ எழுந்து வாறாய்
வெற்றி மணி கேட்டிடனும் உன்வான வெளியில்
கொற்றவளே குலம்காக்க குதித்தோடி வருவாய்.

## அவதாரப்பாடல்கள்

ஆசிதாரும் ஆசிமடப் பிள்ளையாரே
காசீஸ்வரர் காளிபுகழ் சொல்லிடவே
பாசமுடன் நானும் பாடவந்தேன்
நேசமுடன் நீயும் ஏற்றிடம்மா
குற்றமேதும் அம்மா நேர்ந்திடாமல்
குலவிளக்கே முன்னின்று காருமம்மா

அன்னையவள் திருவுள்ளமாய் அமைந்த பெருங்கோயில்
ஏழுதல விமானங் கொண்ட ஈழத்திருக்கோயில்
மைசூரில் இருந்து வந்த மாகாளியம்மன் தாயார்
முப்பெரும் சக்தியாக முன் எழுந்து நின்றார்

பாம்பு புற்று நடுவினிலே மாரியம்மா தாயே
படமெடுத்து ஆடிவாறாய் பக்குவமாய் நீயே
நாகபாம்பு கூட்டத்தினில் நடுவினிலே தாயே
நர்த்தனங்கள் ஆடிநின்றாய் காளியம்மா தாயே

அஞ்சுதலை நாகமெல்லோ தாயே மகமாரி அவா
கொஞ்சி விளையாடிவாறா கூட்டத்துடன் கூடி
கெஞ்சி வரம் கேட்பவற்கு மாரியம்மா தாயார்
விஞ்சும் வரம் கொட்டுகிறா காளியம்மா தாயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி நகர்க்கரையினிலே மிதந்து வந்த இலிங்கம்
பாவங்களை போக்கிவிடும் புதுமை கொண்ட இலிங்கம்
சிவபாலயோகியாரும் சேர்ந்தமர்ந்த இலிங்கம்
மோட்சநிலை கொடுத்து விடும் இலிங்கம்.

மிருக பலி அம்மா வேண்டாமென்று
தணலுருவாய் அம்மா நீரெழுந்தீர்
கருணையுள்ளம் கொண்ட காளியம்மா
திருவருளை நீயும் காட்டி நின்றாய்

பாலாலே அபிஷேகம் எங்கள் காளி அம்மனுக்கு
மஞ்சள் நீர் அபிஷேகம் எங்கள் காளி அம்மனுக்கு
தயிர் கொண்டு அபிஷேகம் சூலம் கொண்ட அம்மனுக்கு
இளநீரால் அபிஷேகம் எங்கள் காளி அம்மனுக்கு.

பழங்களால் அபிஷேகம் பழவினை போக்குவதற்கு
விபூதி அபிஷேகம் வினைகளைத் தீர்ப்பதற்கு
சந்தன அபிஷேகம் சர்வரோகம் போக்குவதற்கு
பன்னீரால் அபிஷேகம் பாரில் எமைக் காப்பதற்கு

கற்பூர ஜோதியிலே கருணை முகம் தோன்றுதம்மா
திரையின் மறைவிலே நின் தோற்றம் மாறுதம்மா
திரைவிலகி தீபஜோதியில் திகட்டாத தரிசனம்
அழகிய நின்ரூபம் ஆனந்தம் அற்புதமே! ஆனந்தம் அற்புதமே!
- ஆனந்தம் அற்புதமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org